முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2025 யூலை

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2025-07-26
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம்*** *: வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பயனுள்ள நிதித் தகவல்களின் தர ரீதியான பண்புகள் நிதிக் கூற்றுக்களில் தரப்பட்ட நிதித் தகவல்களுக்கும் அதே போன்று ஏனைய வழிகளில் வழங்கப்பட்ட நிதித் தகவல்களுக்கும் பொருந்தும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, இரண்டு (02) அடிப்படைத் தர ரீதியான பண்புகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நிதித் தகவல்களின் பயனை மேம்படுத்துகின்ற தர ரீதியான மேம்படுத்தல் பண்புகள் இரண்டைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

ஒருங்கிணைந்த அறிக்கையில், ஒன்றுக்கொன்று அடிப்படையில் தொடுக்கப்பட்டதும் ஒன்றுக்கொன்று பிரத்தியேகமாக இல்லாததுமான எட்டு உள்ளடக்கக் கூறுகள் (content elements) இருக்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் ஐந்து (05) பிரதான உள்ளடக்கக் கூறுகளைக் **குறிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

## வினா 03

2024 ஏப்ரல் 01 இல் **அருணி** PLC ஆனது **சந்துனி** PLC இன் 75% வீதமான சாதாரண பங்கு மூலதனத்தை ரூ. 15,000,000/- இற்குக் கையகப்படுத்தியது. கையகப்படுத்தல் திகதியில், **சந்துனி** PLC இன் நிகரச் சொத்துக்களின் புத்தகப் பெறுமதி கீழ்வருமாறு :

| | **ரூ. ('000)** |
|---|---|
| குறிப்பிடு மூலதனம் | 10,000 |
| கைக்கொள் இலாபம் | 4,500 |

கையகப்படுத்தல் திகதியில், **சந்துனி** PLC இன் நிகரச் சொத்துக்களின் சீர் மதிப்பு ரூ. 16,000,000/- ஆகும். முன்கொணரற் பெறுமதிக்கும் சீர் மதிப்புக்கும் இடையேயான வித்தியாசமானது அதன் காணிகளின் மீள்மதிப்பீடு காரணமாக ஏற்பட்டதாகும். அந்தத் திகதியில், கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர் மதிப்பு ரூ. 4,500,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கையகப்படுத்தலினால் எழுகின்ற நன்மதிப்பைக் (goodwill) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

(a) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பது பிறருக்கு வாடகைக்காக அல்லது நிருவாக நோக்கங்களுக்காக பொருள்கள் அல்லது சேவைகளை வழங்குவதில் அல்லது உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுகின்ற உருவ (தொட்டுணரக்கூடிய) உருப்படிகளாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஒரு உருப்படியின் கிரயத்தை ஒரு சொத்தாக ஏற்பிசைவு செய்வதற்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இரண்டு (02) தேர்வு நிபந்தனைகளைக் (criteria) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனமாகக் (SME) கருதப்படுகின்ற **Silva (Pvt) Ltd.** ஆனது 2020 இல் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்தது. இக்கம்பனியின் முகாமைப் பணிப்பாளரான **சில்வா** கீழ்வரும் விடயங்களில் தெளிவினைப் பெறும் பொருட்டு நிதி ஆலோசகர் ஒருவரை அணுகியிருந்தார் :

(1) கம்பனியானது அதன் தொக்குகளின் மதிப்பீட்டு முறையை எடையேற்றிய சராசரிக் கிரய முறை (WAC) இலிருந்து முதல் உள்ளே – முதல் வெளியே (FIFO) முறைக்கு மாற்ற எதிர்பார்க்கிறது.

(2) கிரயத்தில் தொக்குகளின் பெறுமதி ரூ. 250,000/- ஆகவும் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூ. 275,000/- ஆகவும் இருந்தன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி ஒவ்வொரு விடயமும் SMEகளுக்கான SLFRS உடன் இணங்குவதற்கு, **Silva (Pvt) Ltd.** இன் கணக்கேடுகளில் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்படலாம் என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**Chemiro (Pvt) Ltd.** இன் 2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்கள் பின்வருமாறு:

**Chemiro (Pvt) Ltd.**

**நிதி நிலைக் கூற்றுகள்** *(ரூ. '000)*

| மார்ச் 31 இல் | 2025 | 2024 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 220,400 | 156,930 |
| திரண்ட தேய்மானம் | (129,100) | (101,460) |
| **முன்கொணரற் பெறுமதி** | **91,300** | **55,470** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 106,420 | 157,439 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 110,426 | 97,830 |
| காசும் காசுச் சமானங்களும் | 15,400 | 8,900 |
| | **232,246** | **264,169** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **323,546** | **319,639** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் (12,800,000 சாதாரண பங்குகள்) | 128,000 | 128,000 |
| கைக்கொள் இலாபம் | 125,596 | 114,939 |
| | **253,596** | **242,939** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன்கள் | 30,400 | 31,400 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 21,480 | 26,700 |
| | **51,880** | **58,100** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 5,400 | 420 |
| வங்கிக் கடன் | 2,000 | 11,500 |
| செலுத்த வேண்டிய கடன் வட்டி | 7,430 | 1,040 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 3,240 | 5,640 |
| | **18,070** | **18,600** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **323,546** | **319,639** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவு ரூ. 3,400,000/- ஆகும். கம்பனியின் வரி மற்றும் வட்டிக்கு முந்திய இலாபம் ரூ. 23,437,000/- என்பதுடன் 2024 டிசெம்பர் 31 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

(2) ஒரு இயந்திரம் 2024 அக்டோபர் 01 இல் ரூ. 9.5 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இயந்திரத்தின் கிரயம் ரூ. 15 மில்லியனாக இருந்த அதே வேளை 2024 ஏப்ரல் 01 இலான திரண்ட தேய்மானம் ரூ. 7.5 மில்லியனாக இருந்தது. இயந்திரம் 10 வருடங்கள் ஈறாக கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகின்றது. விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்திற்கு மாற்றீடாக ஒரு புதிய இயந்திரம் 2025 மார்ச் 31 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இது அதே திகதியில் மூலதனமாக்கப்பட்டது.

(3) ஆண்டிற்கான வட்டிச் செலவினம் ரூ. 8,100,000/- ஆக இருந்ததுடன் கம்பனி ஆண்டின்போது ஒரு புதிய வங்கிக் கடன் ரூ. 10,000,000/- இனைப் பெற்றிருந்தது.

(4) ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ. 1,750,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

<u>நேரில் முறையைப் பயன்படுத்தி,</u> 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Chemiro (Pvt) Ltd.** இனது காசுப் பாய்வுக் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(a) காற்று பதனமாக்கிகளை விற்பனை செய்வதிலும் அவற்றுக்கான பராமரிப்பு சேவைகளை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ள **ABC Ltd.** இன் ஏடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

**ABC Ltd.** ஆனது 2024 ஏப்ரல் 01 இல் ரூ. 22,000/- மாதாந்தக் கட்டணத்தில் பராமரிப்பு சேவைகளுடன் காற்று பதனமாக்கி ஒன்றை விற்பதற்கு **Ranga Ltd.** உடன் 2 வருட காலப்பகுதிக்கான உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இவ்விற்பனையானது தனித்தனியாக மேற்கொள்ளப்பட்டிருப்பின், காற்று பதனமாக்கி ஒன்றின் சந்தை விலை ரூ. 360,000/- உம் மாதாந்த பராமரிப்புக் கட்டணம் ரூ. 8,000/- உம் ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் என்ற நியமத்தின்படி, மேற்படி பரிவர்த்தனை மீதான 2025 மார்ச் 31 மற்றும் 2026 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான வருமானத்தை **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) 2024 ஏப்ரல் 01 இல், ஒரு புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக **Lak Ltd.** (குத்தகைதாரர்) ஆனது **XYZ Finance Ltd.** (குத்தகைக்கு விடுபவர்) உடன் ஒரு குத்தகை உடன்படிக்கையைச் செய்து கொண்டது. குத்தகை உடன்படிக்கை தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| இயந்திரத்தின் கிரயம் | ரூ. 7,000,000 |
| குத்தகையின் ஆரம்பத்தில் செய்யப்பட்ட உடனடிக் கொடுப்பனவு | ரூ. 1,000,000 |
| குத்தகைக் காலம் | 4 ஆண்டுகள் |
| உள்ளார்ந்த வட்டி வீதம் | ஆண்டிற்கு 14% |
| வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் | ரூ. 2,059,229 |

குத்தகையின் முதலாவது வருடாந்தத் தவணைக் கட்டணம் 2025 மார்ச் 31 இல் செலுத்தப் பட்டதுடன், குத்தகை உடன்படிக்கையின்படி, இயந்திரத்தின் உரிமையானது குத்தகைக் கால முடிவில் **Lak Ltd.** இற்கு மாற்றப்படும். கம்பனி சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமையை குத்தகைக் காலம் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி குத்தகைப் பரிவர்த்தனை தொடர்பாக **Lak Ltd.** இன் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுப்பையும் 2025 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்றின் பிரித்தெடுப்பையும் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(A) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Salma Ltd.** இன் நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2025 யூன் 30 இல் அதிகாரமளிக்கப்பட்டன. பின்னர், நிதி முகாமையாளர், நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கருத்திற் கொள்ளப்படாத பின்வரும் நிகழ்வுகள் அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டார் :

(1) 2025 யூன் 15 இல், தொக்குகளைக் கணக்கிடும்போது மோசடியொன்று நடந்திருப்பது தெரிய வந்தது. இது நிதிக் கணக்காளர் மற்றும் களஞ்சிய முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிகழ்வு காரணமாக ரூ. 30 மில்லியன் இழப்பு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது. மேலும் இந்த மோசடி காரணமாக 2025 மார்ச் 31 இல் தொக்கின் பெறுமதி இந்தத் தொகையால் மிகைப்படுத்திக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(2) சந்தை சரிவு காரணமாக 2025 ஏப்ரல் 10 இல் குறுங்கால முதலீடுகளின் பெறுமதி ரூ. 500,000/- இனால் குறைவடைந்துள்ளது.

(3) 2025 ஏப்ரல் 10 இல் இடம்பெற்ற கூட்டத்தில் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தில் சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கொன்றிற்கு ரூ. 2/- என்றவாறு இறுதிப் பங்கிலாபத்தை பணிப்பாளர் சபை அங்கீகரித்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, **Salma Ltd.** இன் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்படி நிகழ்வுகள் ஒவ்வொன்றும் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்படும் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) பின்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Beta Ltd.** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூ. ('000)** |
|---|---|
| 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய இலாபம் | 12,400 |
| 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரி விதிக்கத்தக்க இலாபம் | 20,000 |
| 2024 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு | 3,500 |

ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு: *(ரூ. '000)*

| **சொத்து** | **கிரயம்** | **2025 மார்ச் 31 இல் முன்கொணரற் பெறுமதி (கணக்கீட்டில் எழுதப்பட்ட பெறுமதி)** | **2025 மார்ச் 31 இல் வரி நோக்கத்தின்படி திரண்ட தேய்மானம் (மூலதன விடுதொகை)** |
|---|---|---|---|
| காணி | 10,000 | 10,000 | - |
| கட்டடங்கள் | 54,000 | 38,500 | 22,500 |

நிறுவன வருமான வரி வீதம் 30% ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2025 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிச் செலவினத்தைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

2025 மார்ச் 31 இல் **Zigma PLC** இன் கணக்கேடுகளில் இருந்து பின்வரும் பரீட்சை மீதி பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.:

**Zigma PLC**

**2025 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ. '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (50,000,000 சாதாரண பங்குகள்) | | 50,000 |
| கைக்கொள் இலாபம் - 2024 ஏப்ரல் 01 இல் | | 8,400 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 3,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணி – மீள்மதிப்பீட்டுத் தொகையில் (கிரயம் – ரூ. 25,000,000/-) | 28,000 | |
| கட்டடங்கள் | 23,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 14,000 | |
| **2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :** | | |
| கட்டடங்கள் | | 13,500 |
| மோட்டார் வாகனங்கள் | | 6,500 |
| சொத்துக்கள் விற்பனைக் கணக்கு | | 5,000 |
| மூலதன புத்துருவாகும் வேலை | 14,550 | |
| 2025 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 63,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 41,000 | 20,725 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 55,525 | |
| வங்கிக் கடன் | | 6,000 |
| செலுத்திய வருமான வரி | 6,500 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 151,200 | 354,000 |
| ஏனைய வருமானம் | | 8,100 |
| 2024 ஏப்ரல் 01 இல் செலுத்த வேண்டிய வருமான வரி | | 4,500 |
| நிருவாகச் செலவினங்கள் | 39,750 | |
| விநியோகச் செலவினங்கள் | 28,700 | |
| நிதிச் செலவினங்கள் | 14,500 | |
| | **479,725** | **479,725** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 ஏப்ரல் 01 இல், கம்பனி அதன் மோட்டார் வாகனங்களில் ஒன்றை ரூ. 5 மில்லியனுக்கு விற்பனை செய்தது. இந்த வாகனத்தின் கிரயம் ரூ. 6 மில்லியனாக இருந்ததுடன் விற்பனைத் திகதியில் திரண்ட தேய்மானம் ரூ. 1.5 மில்லியனாக இருந்தது. மோட்டார் வாகன விற்பனை மீது பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையானது சொத்துக்கள் விற்பனைக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டது. பெறப்பட்ட காசைப் பதிவு செய்ததைத் தவிர கணக்கேடுகளில் வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 50 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |

(3) 2024 ஏப்ரல் 01 இல், கம்பனியானது கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக ஆண்டிற்கு 10% வட்டியில் ரூ. 6,000,000/- வங்கிக் கடனொன்றைப் பெற்றுள்ளது. கட்டடத்தின் நிர்மாணம் 2024 ஏப்ரல் 01 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 2024 டிசெம்பர் 31 இல் பூர்த்தியடைந்தது. இந்தக் கட்டடம் 2025 சனவரி 01 இலிருந்து செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. நிர்மாணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட கிரயம், மூலதனப் புத்துருவாகும் வேலைக் கணக்கின் கீழ் பதிவு செய்யப் பட்டதுடன் ஆண்டிற்கான வட்டி நிதிச் செலவினங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்தக் கடன் மீதான மூலதன மீள் கொடுப்பனவுகள் 2025 ஏப்ரல் 01 இலிருந்து ஆரம்பித்தன. கடனின் கால்வாசிப் பகுதி (1/4) அடுத்த நிதியாண்டில் (2025/26) தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

(4) கம்பனிக் கொள்கையின்படி, காணியானது ஒவ்வொரு 2 வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்படுகிறது. அதற்கிணங்க, காணியானது 2025 மார்ச் 31 இல் ரூ. 30,000,000/- ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இது தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(5) வணிகத்திற்கு ரூ. 1,500,000/- கடன் தர வேண்டிய வாடிக்கையாளர் ஒருவர் 2025 மே 25 இல் வங்குரோத்து அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். இப்போது அந்தத் தொகை வசூலிக்கப்பட முடியாததாகவும் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட வேண்டியது எனவும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. மேலும், 2025 மார்ச் 31 இலான எஞ்சிய வியாபார வருமதிகள் மீதியில் 10% இல் வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணத் தீர்மானிக்கப்பட்டது.

(6) வரிமதிப்பாண்டு 2024/25 காலப்பகுதியில் செலுத்தப்பட்ட வரிமதிப்பாண்டு 2023/2024 இற்கான ரூ. 4,500,000/- வருமான வரிப் பரிப்பானது செலுத்திய வருமான வரிக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. வரிமதிப்பாண்டு 2024/2025 இற்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 9,750,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) 2025 மார்ச் 15 இல், கம்பனியின் முன்னாள் ஊழியர் ஒருவர், மோசடி காரணமாக கம்பனியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதன் பேரில், ரூ. 2,000,000/- இழப்பீடு கோரி கம்பனிக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். சான்றுகள் கிடைக்காத காரணத்தால் இழப்பீடாக முழுத் தொகையையும் செலுத்துவதற்கு அதிக வாய்ப்பு காணப்படுவதாக கம்பனியின் வழக்கறிஞர்கள் உறுதி செய்துள்ளனர். இது தொடர்பில் ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

(8) 2024/25 ஆண்டிற்கான அட்டுறுவான கணக்காய்வுக் கட்டணம் ரூ. 150,000/- ஆனது கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது.

(9) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2025 மே 31 இல் அங்கீகாரம் வழங்கியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவத்தில் **Zigma PLC** இற்காகப் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (07 புள்ளிகள்)

(c) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு. (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

**Vikash PLC** ஆனது 2024 ஏப்ரல் 01 இல் **Prakash PLC** இன் 90% மான சாதாரண பங்குகளை ரூ. 105 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது. கொள்வனவிலிருந்து எழுகின்ற நன்மதிப்பு ரூ. 17 மில்லியன் ஆகும்.

**Vikash PLC** இனதும் **Prakash PLC** இனதும் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூ. '000)*

| | Vikash PLC | Prakash PLC |
|---|---|---|
| விற்பனைகள் | 1,035,200 | 624,000 |
| விற்பனைக் கிரயம் | (703,900) | (443,000) |
| **மொத்த இலாபம்** | **331,300** | **181,000** |
| **ஏனைய வருமானம்:** | | |
| ஏனைய வருமானம் | 3,600 | 900 |
| சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் | 200 | 620 |
| **செலவினங்கள் :** | | |
| விநியோகச் செலவினங்கள் | (64,000) | (34,000) |
| நிருவாகச் செலவினங்கள் | (116,000) | (67,000) |
| நிதிச் செலவினங்கள் | (18,500) | (23,400) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **136,600** | **58,120** |
| வருமான வரி | (40,980) | (16,564) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **95,620** | **41,556** |
| ஏனைய முற்றடக்க வருமானம் | 355 | - |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | **95,975** | **41,556** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் காலப்பகுதியில், **Vikash PLC** ஆனது கிரயத்தில் 25% இலாப எல்லை வைத்து **Prakash PLC** இற்கு ரூ. 60,000,000/- கிரயமான பொருள்களை விற்பனை செய்தது. 2025 மார்ச் 31 இல், **Vikash PLC** இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 5,000,000/- பெறுமதியான தொக்குகள் **Prakash PLC** இன் களஞ்சியத்தில் விற்பனை செய்யப்படாது எஞ்சியுள்ளன.

(2) **Vikash PLC** இன் ஏனைய வருமானங்களில் **Prakash PLC** இற்கு வழங்கப்பட்ட ஆலோசனை சேவைகளுக்காக **Prakash PLC** இனால் செலுத்தப்பட்ட ரூ. 3,000,000/- முகாமைத்துவக் கட்டணம் உள்ளடங்குகிறது.

(3) **Prakash PLC** ஆனது ஆண்டிற்கு 10% வட்டியில் **Vikash PLC** இடமிருந்து 2024 அக்டோபர் 01 இல் ரூ. 2,000,000/- கடனொன்றைப் பெற்றுக்கொண்டது. 2024/25 ஆம் ஆண்டிற்கான வட்டி **Prakash PLC** இனால் **Vikash PLC** இற்கு முழுமையாகச் செலுத்தப்பட்டது.

(4) 2024 ஏப்ரல் 01 இல், ரூ. 10,000,000/- விலையில் **Vikash PLC** இற்கு **Prakash PLC** இயந்திரமொன்றை விற்பனை செய்தது. இது அந்தத் திகதியில் **Praksh PLC** இன் ஏடுகளில் ரூ. 9,500,000/- முன்கொணரற் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2024 ஏப்ரல் 01 இல் இந்த இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 10

2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **Rex PLC** இன் முற்றடக்க வருமானக் கூற்றுக்களினதும் 2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்களினதும் பிரித்தெடுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :

**Rex PLC**

**வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூ. '000)*

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கானது | 2025 | 2024 |
|---|---|---|
| விற்பனைகள் | 410,000 | 320,000 |
| விற்பனைக் கிரயம் | (264,000) | (212,500) |
| **மொத்த இலாபம்** | **146,000** | **107,500** |
| வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் | 71,600 | 37,600 |
| வட்டிச் செலவினம் | (9,737) | (9,100) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 61,863 | 28,500 |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **42,884** | **20,093** |

**Rex PLC**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூ. '000)*

| மார்ச் 31 இல் | 2025 | 2024 |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் – முன்கொணரற் பெறுமதியில் | 320,000 | 280,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 82,000 | 75,000 |
| வியாபார வருமதிகள் | 54,000 | 42,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 12,000 | 9,000 |
| | 148,000 | 126,000 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **468,000** | **406,000** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் (20 மில்லியன் சாதாரண பங்குகள்) | 200,000 | 200,000 |
| கைக்கொள் இலாபம் | 79,400 | 55,500 |
| **நீண்ட காலப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன் | 110,000 | 80,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 61,500 | 55,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 9,600 | 6,500 |
| அட்டுறு செலவினங்கள் | 7,500 | 9,000 |
| | 78,600 | 70,500 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **468,000** | **406,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்களைக் கவனத்திற் கொள்க :

(1) 2023 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மற்றும் தொக்குகள் முறையே ரூ. 32,000,000/- உம் ரூ. 20,000,000/- உம் ஆகும்.

(2) அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதுக.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளில் / முடிவடைந்த ஆண்டுகளுக்கான மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, **Rex PLC** இன் பின்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம்

(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(iv) தொக்கு இருப்புக் காலம்

(v) பங்கொன்றின் வருவாய் (10 புள்ளிகள்)

(b) மேற்படி இரு ஆண்டுகளையும் ஒப்பிட்டு, மாறுபாடுகளுக்கான சாத்தியமான காரணங்களை விபரித்து **Rex PLC** இன் முகாமைக்கு பொழிப்பு அறிக்கை ஒன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |